**O.S.No.356/2013**

**Date:11.10.2018**

**4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும்**

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - ராஜலெட்சுமி என்ற ரமீலா, க-பெ.ஸ்ரீதர்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவாச் சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியம் என்று தெரியுமா என்றால் சேதுராமனுக்குப் பாத்தியப்பட்டதாகும். தாவாச் சொத்தின் நான்குமால், சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சேதுராமன் எந்த வருடம் இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. சேதுராமன் இறந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாதிகள் உடன்பிறந்தவர்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும. தாவாச் சொத்துக்கு கேசி.குருசாமியும் கூட்டுரிமையாளர் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் கிரையம் வாங்கியுள்ள சொத்துக்கு பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் கே.சி.குருசாமி பெயரில் இருந்தது. தேசிய நெடுஞ்சாலைக்கு பணம் எடுததற்கு இழப்பீட்டுத் தொகை யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் கே.சி.குருசாமி மற்றும் சேதுராமனுக்கு கொடுக்கப்பட்டது. வாதி உயிரோடு இருந்த காலம் வரை யாரும் பிரச்சனை செய்யவில்லை என்ற விபரத்தை என் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. தாவாச் சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் 3வது பக்கத்தில் 1947ம் ஆண்டில் எனது முதல்வரும் அவரது சகோதரர் கே.சி.குருசாமியும் சேர்ந்து பாகம் செய்து கொண்டதில், யார், யாருக்கு என்ன பாகம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கே.சி.குருசாமி மற்றும் அவரது சகோதரர் பாகம் செய்து கொண்டுள்ளதைப் பொறுத்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவாச் சொத்து சேதுராமனுக்கு மட்டும் பாத்தியம் இல்லை என்றாலும், குருசாமிக்கும் சேர்ந்து தான் பாத்தியம் என்றால் சரிதான். எனவே நான் கிரயம் பெற்ற கிரைய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.